இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 27-09-2024

# ஐரோப்பிய உடையில் சனாதனச் சரக்கு

மதச்சார்பின்மை என்பது ஐரோப்பியச் சரக்கு என்றும், அது இந்தியாவுக்குத் தேவையில்லை என்றும் மாஜி ஐ.பி.எஸ். அதிகாரியும் இன்றைய சனாதனக் காவலருமான ஆர்.என்.ரவி சொல்லி இருக்கிறார்.

அவர் அணிந்திருக்கும் கோட், சூட் தான் ஐரோப்பியச் சரக்கு என்று மிகச்சரியாகச் சொல்லி இருக்கிறார் எழுத்தாளர் ஆதவன் தீட்சண்டா. அது மட்டுமா? ஆர்.என்.ரவி படித்த படிப்பான ஐ.பி.எஸ்ஸும் ஐரோப்பிய சரக்குதான். அவர் இப்போது வகித்து வரும் கவர்னர் பதவியே ஐரோப்பியச் சரக்குதான். கவர்னர், கவர்னர் ஜெனரல் எல்லாம் பிரிட்டிஷாரின் உருவாக்கமே. ஆனால் பிரிட்டிஷார்தான் இந்த நாட்டைக் கெடுத்ததாக மேடைகளில் சொல்லி வருகிறார்.

**இவர் சனாதனம் என்று சொல்லி வரும் மனித அடிமைத்தன கருத்துருவாக்கத்துக்கு எதிரான சட்டங்களைக்கொண்டு வந்ததால்தான் பிரிட்டிஷார் மீது இவர்களுக்கு ஆற்றமுடியாத கோபம். ஆட்சியைக் கொடுத்துவிட்டு பிரிட்டிஷார் போன பிறகும் திட்டிக் கொண்டிருக்கக் காரணம், அனைவருக்கும் பொதுவான சட்டத்தை இந்தியாவில் கொண்டு வந்து விட்டார்களே என்பதால்தான்.**

“இந்த நாட்டு மக்களுக்கு ஏராளமான மோசடிகள் நடந்துள்ளது. அதில் ஒன்று மதச்சார்பின்மை என்பது ஆகும். மதச்சார்பின்மை என்றால் என்ன? மதச்சார்பின்மை என்பது ஐரோப்பியக் கருத்து. அது இந்தியக் கருத்து அல்ல. ஐரோப்பாவில் மன்னருக்கும், சர்ச்சுகளுக்கும் இடையில் சண்டை வந்ததால் மதச்சார்பின்மை வந்தது. இந்தியா எப்படி தர்மத்திலிருந்து விலகி நிற்க முடியும்? இந்தியாவில் மதச்சார்பின்மை தேவையில்லை” என்று கன்னியாகுமரியில் சொல்லி இருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. இவர் இப்படிப் பேசியது அரசியலமைப்புச் சட்ட விரோதம் ஆகும்.

**அரசியலமைப்புச் சட்டப்படி நடப்பேன் என்று உறுதிமொழி ஏற்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட அவர், அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராகப் பேசுவதே சட்டப்படி குற்றமாகும்.**

மதச்சார்பின்மை என்ற கருத்து ஏன் வருகிறது? பல்வேறு மதங்கள் இருப்பதால் வருகிறது. இந்தியாவில் பல்வேறு மதங்கள் இருக்கின்றன. அதனால், இங்கு அமையும் அரசானது எந்த மதத்தையும் சாராத அரசாக இருக்க வேண்டும் என்பதால் ‘மதச்சார்பின்மை’ என்ற தத்துவம் தேவைப்படுகிறது. இந்தியாவுக்குத்தான் இந்தத் தத்துவம் தேவை. அதுவும், மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்தும் பா.ஜ.க. போன்ற கட்சிகள் இருக்கும் இந்திய நாட்டில்தான் அது மிகமிக அவசியத் தேவையாகும்.

மதங்களிடம் இருந்து அரசு விலகி இருக்க வேண்டும். அப்போதுதான் அது உண்மையான, பொதுவான அரசாக இருக்க முடியும். அனைவருக்கும் பொதுவானதாக அரசு இருக்க முடியும். குறிப்பிட்ட மதம் ஆதிக்கம் செலுத்தும் அரசு, அனைவர்க்குமான அரசாக இருக்க முடியாது. குறிப்பிட்ட மதத்தின் அரசாகத்தான் இருக்க முடியும்.

அரசுகளிடம் இருந்து மதங்களும் விலகி இருக்க வேண்டும். அப்போதுதான், அது உண்மையான இறையியல் மதமாக, அது இருக்க முடியும். இல்லாவிட்டால் அரசு, அரசியலின், அதிகாரத்தின், அதிகார வர்க்கத்தின் குணம் மதத்துக்கும் வந்து விடும். மன அடிப்படையிலானது மதம். அது அரசில் ஆட்சி செலுத்த ஆரம்பித்தால் ஆதிக்க மதமாக மாறி விடும்.

எனவேதான் இரண்டையும் பிரித்து வைத்தார்கள் நம்முடைய முன்னோர்கள். ரவி சொல்வது போல இது ஐரோப்பியச் சரக்கல்ல. இந்தியச் சரக்குதான்.

“நானும் ஓர் சனாதன ஹிந்து” என்று சொல்லிக் கொண்டவர் தான் அண்ணல் காந்தியடிகள். அவரேதான், “வேதங்களுக்கு மட்டுமே தனித்து ஈசுவரத் தன்மை உண்டு என்று நான் கருதுவதில்லை. வேதங்களுக்கு எவ்வளவு ஈசுவரத்தன்மை உண்டோ அவ்வளவு ஈசுவரத் தன்மை கிறிஸ்துவ வேதமாகிய பைபிளுக்கும், முகமதியர் வேதமாகிய குர் ஆனுக்கும், பாரசீகரின் வேதமாகிய ஜெண்டவஸ்தாவுக்கும் உண்டு என்று கருதுபவன் நான்” என்றும் சொன்னார்.

“இந்தியாவில் இந்துக்கள் மட்டுமே இருக்க வேண்டுமென்று இந்துக்கள் கருதினால் அவர்கள் கனவு காண்பவர்கள் ஆவார்கள். இந்தியாவைத் தங்கள் தாய் நாடாக்கிக் கொண்ட இந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும், பார்சிகளும், கிறிஸ்தவர்களும் சகோதரர்கள் ஆவார்கள்” என்றவர் அவர். அதனால்தான் தேசத்தந்தை என்று அண்ணல் போற்றப்படுகிறார். ரவிகளின் அடையாளம் என்ன? ஐரோப்பிய உடையில் போலித் தத்துவங்களை விற்பது மட்டும் தான்.

இந்திய நாட்டை குறிப்பிட்ட ஒரு மதப் பெரும்பான்மை வாதத்தின் நாடாக மாற்றுவதற்கு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நூறு ஆண்டுகளாக முயற்சித்து வருகிறது. அது நடக்கவில்லை. ஏனென்றால், இந்திய மக்களின் ரத்தத்தில் வேற்றுமையில் ஒற்றுமை காணும் தன்மை உள்ளது. ‘என் கடவுள் எனக்கு, உன் கடவுள் உனக்கு’ என்ற பரந்து பட்ட சிந்தனையானது இந்திய மக்களின் மனதில் உள்ளது. அதனால்தான் 100 ஆண்டுகளாக ஆர்.எஸ்.எஸ்.சித்தாந்தம் இங்கு மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது.

**பிரச்சாரத்தின் மூலமாக இதைச் செய்வதில் தோற்றுப்போன பா.ஜ.க. மூதாதையர்கள், இப்போது அரசியல் மூலமாக ஆட்சியைப் பிடித்து அதிகாரத்தின்மூலமாக பாசிசத்தை ஆட்சியில்நிலைநிறுத்தப்பார்க்கிறார்கள். ‘மதச்சார்பின்மை’ என்ற சொல்லுக்கு எதிராக கவர்னர் பதவியில் இருந்து கொண்டு பேசுவதை, ‘நிர்வாக நடவடிக்கைகளில் ஒன்றாக’ மாற்றிக் காட்ட நினைக்கிறார் ரவி. அவர் என்னவாக நினைத்துச் சொன்னாலும் தமிழ்நாட்டில் அவர் பேச்சுக்கு அரையணா மரியாதை கூட கிடைக்காது. யூ டியூப்புகளுக்கு அவர் ஒரு நாள் கண்டெண்ட் ஆகலாம்!**

**அவர் இப்படிப் பேசுவதே யூ டியூப் ஸ்டார் ஆவதற்காகத்தான்.**



மும்பையில் நேற்று வஃபு சட்டத்திருத்தம் குறித்து ஆலோசிக்க நடைபெற்ற வஃபு வாரிய நாடாளுமன்ற கூட்டுக் குழுக் கூட்டத்தில் மக்களவை கழகக் கொறடா ஆ.ராசா அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கூட்டரங்கில், நேற்று (26.09.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருச்சி மண்டலப் பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்பட்டு வரும் கட்டடப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, தலைமைக் கட்டடக் கலைஞர் திருமதி இளவேண்மாள், திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் செந்தில், சிறப்பு பணி அலுவலர் இரா.விஸ்வநாத், கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



### பஹ்ரைன் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாட்டின் 28 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பீர்!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, செப். 27 - பஹ்ரைன் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப் பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 28 மீனவர்களை விரைவில் விடுவிப்ப தற்குத் தேவையான சட்ட உதவிகள் மற்றும் தூதரக உதவிகளை வழங்கிட வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளி யுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (26-9-2024) எழுதியுள்ள கடிதத்தில்,

திருநெல்வேலி மாவட்டம், இடிந்தகரை கிராமத்தைச் சேர்ந்த 28 மீனவர்கள் ஈரான் நாட்டிற்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த நிலையில், அங்கு எல்லை தாண்டிச் சென்றதாக பஹ்ரைன் கடலோரக் காவல் படையினரால் கடந்த 11-9-2024 அன்று கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு ள்ளார்.

பஹ்ரைன் கடலோரக் காவல் படையினரின் இந்த கைது நட வடிக்கையின் காரணமாக, மீன வர்களது வருமானத்தை மட்டுமே நம்பியுள்ள அவர்களது குடும்பத்தி னர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கவலைபடத் தெரி வித்துள்ளார்.

எனவே, கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விரைவில் விடுவிப்ப தற்குத் தேவையான சட்ட உதவிகள் மற்றும் தூதரக உதவிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு நிதி ஒதுக்காமல் வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசு!

# மும்பை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 151 சதவீதம் அதிக நிதியை ஒதுக்கியுள்ளது!

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் அம்பலம்!

சென்னை, செப். 27 –

சென்னையில் இரண்டாம் கட்டமாக 118 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த திட்டத்திற்கு ஒன்றிய அரசு இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யாமல் வஞ்சித்து வருகிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு இதுவரை தனது சொந்த நிதியிலிருந்து 11 ஆயிரத்து 762 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது. வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் மூலமாக 6 ஆயிரத்து 802 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு சார்பில் இதுவரை இத்திட் டத்திற்காக 18 ஆயிரத்து 564 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பொது முதலீட்டுக் குழுவினால் பரிந்துரைக் கப்பட்ட ஒன்றிய அரசின் பங்கான 7 ஆயி ரத்து 425 கோடியில் ஒரு ரூபாய் கூட ஒன் றிய அரசால் இன்னும் விடுவிக்கப்பட வில்லை. ஆனால் பா.ஜ. கூட்டணி ஆளும் மகாராஷ்டிராவில் மூன்றாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்குத் தேவைக்கு அதிக மான நிதியை ஒன்றிய அரசு வாரி வழங்கி யுள்ளது.

மும்பையில் 33.5 கிலோ மீட்டர் தொலைவிற்கு செயல்படுத்தப்படும் மூன் றாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் மொத்த மதிப்பீடு 23 ஆயிரத்து136 கோடி யாகும். இதில் ஒன்றிய அரசின் பங்கு 16 ஆயிரத்து 662 கோடியாகும். ஆனால் மகா ராஷ்டிரா மாநில அரசின் நிதியான 6ஆயி ரத்து 474 கோடியையும் சேர்த்து ஒன்றிய அரசே ஒதுக்கி உள்ளது. இந்த திட்டத்திற்கு 23 ஆயிரத்து 136 கோடி தேவையான நிலையில் 2 ஆயிரத்து 18 கோடியையும் கூடுதலாக ஒதுக்கியது.

அதன்படி மும்பை 3ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 25 ஆயிரத்து154 கோடியை ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ளது. இந்நிலையில் சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்திற்கு 1 ரூபாய் கூட ஒதுக் காத ஒன்றிய அரசு, மும்பையில் 3ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 151சதவீதம் நிதி ஒதுக்கி உள்ளது ஆர்.டி.ஐ. மூலம் அம் பலமாகியுள்ளது.

### காஞ்சி தெற்கு மாவட்ட எல்லையான சின்னையன் சத்திரத்திலிருந்து 6 இடங்களில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை

*காஞ்சிபுரம், செப். 27,*

*காஞ்சிபுரம் பச்சை யப்பன் கல்லூரி வளாகத் தில் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் 28 ஆம் தேதி அன்று நடை பெறுகின்றது. இக் கூட்டத் தில் கழகத் தலைவர் முதல் வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார். இம் மாபெரும் பொதுக் கூட்டத்தில் பங்கேற்றிட வருகை தரும் கழகத் தலை வர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட எல்லையான சின் னையன் சத்திரத்திலிருந்து பொதுக்கூட்டம் நடைபெ றும் விழா மேடை வரை 6 இடங்களில் எழுச்சிமிகு வர வேற்பு அளிக்கப்படுகிறது, எனவே அந்தந்த இடங்க ளில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்து கழகத்தினர் திர ளாக பங்கேற்று திராவிட மாடல் நாயகர் முதல்வர் அவர்களை வரவேற்றிட வேண்டுமாய் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம். எல்.ஏ. விடுத்துள்ள அறிக் கையில் கேட்டுக் கொண் டுள்ளார்.*

*இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*



*தி.மு.கழக வரலாற்றில் காஞ்சிபுரத்திற்கு என்று தனி வரலாறு உண்டு என் பதினை நாம் அனைவரும் மறந்ததில்லை. தி.மு.கழ கத்தை தோற்றுவித்த பேர றிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த பூமி காஞ்சிபுரம் ஆகும். திராவிடத்திற்கும், ஆன்மீ கத்திற்கும் பிரசித்தி பெற்ற ஒரு மாநகரம் உண்டென் றால் அது தான் காஞ்சி மாந கரமாகும்.*

*இந்த காஞ்சி மாநகரில் நாளை ( 28.9.2024 சனிக் கிழமை) அன்று மாலை 5 மணிக்கு பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளை யாட்டுத் திடலில் தி.மு.க.பவளவிழா மாபெ ரும் பொதுக்கூட்டம் நடை பெறுகின்றது. இக் கூட்டத் தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், கூட்ட ணிக் கட்சித் தலைவர்கள் உரையாற்றுவார்கள். இக் கூட்டத்திற்கு கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை வகிக்கி றார், நான் ( தெற்கு மாவட் டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.) வர வேற்புரை யாற்றுகிறேன்.*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலா ளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் முன் னிலை வகிக்கிறார்.*

*இதில் தி.மு.க. கூட்ட ணிக் கட்சித் தலைவர்கள் வாழ்த்துரை வழங்குகின்ற னர். காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் நன்றி கூறு கிறார்.*

*இந்த வரலாற்று சிறப்பு மிக்க தி.மு.க.பவளவிழா பொதுக்கூட்டத்தில் நாளை (28ஆம் தேதி) மாலை பங்பேற்று சிறப்பு ரையாற்றிட வருகை தரும் கழகத் தலைவர்முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்க ளுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட எல்லையான சின் னையன் சத்திரத்திலிருந்து பேரறிஞர் அண்ணா அவர் களின் நினைவு இல்லம் வழியாக பொதுக் கூட்டம் நடைபெறும் இடம் வரை யில் குறிப்பாக 6 இடங்க ளில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது. வர வேற்பு அளிக்கப்படும் இடங்களாவன,*

*1) வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் சின்னைய்யன் சத்திரத்தில் காஞ்சிபுரம் நாடாளு மன்ற உறுப்பினர் க.செல்வம் , ஒன்றியச் செய லாளர் பி.எம். பாபு ஆகி யோரின் தலைமையில் வர வேற்பு அளிக்கப்படுகிறது.*

*2) காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் பொன்னேரி கரையில் காஞ்சிபுரம் சட்ட மன்ற உறுப்பினர் சி.வி.எம். பி. எழிலரசன், ஒன்றியச் செயலாளர் பி.எம். குமார் ஆகியோர் தலைமையில் வரவேற்பு அறிக்கப்ப டுகிறது.*

*3) காஞ்சிபுரம் மாநகரம் புதிய ரயில் நிலையம் ஒன் றாவது பகுதிக் கழகம் சார் பில் மாநகரச் செயலாளர் டி.கே.வி. தமிழ்ச்செல்வன், பகுதிச் செயலாளர் கே.தில கர் ஆகியோர் தலைமையில் வரவேற்பு அளிக்கப்படுகி றது.*

*4) காஞ்சிபுரம் மாநகரம் பேருந்து நிலையம் அருகில் 4 வது பகுதிக் கழகம் சார் பில் மாவட்டப் பொருளா ளர் சன்பிராண்ட் கே.ஆறு முகம், பகுதிச் செயலாளர் சு.வெங்கடேசன், ஆகி யோர் தலைமையில் வர வேற்பு அளிக்கப்படுகிறது.*

*5) காஞ்சிபுரம் மாநகரம் காந்தி ரோடு, பெரியார் தூண் அருகில் மாநகர அவைத் தலைவர் கே.ஏ.செங்குட்டுவன் 3வது பகுதிச் செயலாளர் அ.தசர தன்ஆ கியோர் தலைமை யில் வரவேற்பு அளிக்கப்ப டுகிறது.*

*6) காஞ்சிபுரம் மாநகரம் 2வது பகுதிக் கழகம் சார் பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல் லம் அருகே மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகு திச் செயலாளர் எஸ். சந்துரு ஆகியோர் தலைமையில் வர வேற்பு அளிக்கப்படுகிறது.*

*எனவே முதல்வர் அவர் களுக்கு அளிக்கப்படும் இந்த சிறப்பான வரவேற்பு நிகழ்ச்சியில் அந்தந்த பகுதி களைச் சேர்ந்த கழகத்தோ ழர்கள் அனைவரும் திரளா கத் திரண்டு முதல்வர் அவர்களை அன்புடன் வர வேற்றிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள் கிறேன்.*

*இவ்வாறு மாவட்டக் கழ கச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*